# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, பெப்புருவரி மாதம் 02 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்டி) – 24/2004*

**ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

"ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான சம்மேளனமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சம்மேளனத்துடன் தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சம்மேளனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஸ்ரீலங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத்தின் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சம்மேளனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தகைய ஆட்கள் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸ்ரீ லங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனம் என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு

2 –H 022844– 1,100 (2004/09)

குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக் கவும், பயன்படுத்தவும் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுகின்றனவோ அந்தப் பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன :—

(அ) இலங்கையில் வாழும் கண்பார்வையற்ற மக்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்துதல் ;

(ஆ) கண்பார்வை அற்றவர்களுக்கு நலன்புரிச் சேவைகளை வழங்குதலும், கண்பார்வையற்ற சமுதாயத்தினால் எதிர்நோக்கப்படும் பொதுவான மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை நாடுதலும் ;

(இ) கண்பார்வையற்ற சமுதாயத்தினால் எதிர்நோக்கப்படும் பொதுவான மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அரசுக்கும், ஏனைய ஒழுங்கைப்புகளுக்கும் அறிவித்தல் ;

(ஈ) கண்பார்வையற்றோரின் சமுதாயத்தினருக்கு அரசினாலும், ஏனைய ஒழுங்கைப்பினாலும் வழங்கப்படும் பல்வேறு சேவைகளைப் பற்றி அவர்களுடைய விழிப்புணர்வுகளை உருவாக்குதலும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கு அவர்களுக்குத் துணைபுரிதலும் ;

(உ) கண்பார்வையற்றோரின் சமுதாயத்தினருக்குத் தேவைப்படும் தேவைகள் மற்றும் உதவி தொடர்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல் ;

(ஊ) குருட்டுத்தன்மை மற்றும் குருடர் தொடர்பில் சமுதாயத்தில் நிலவும் தவறான எண்ணக் கருத்துக்களையும், பொய்யான மனோபாவங்கையும் நீக்குவதற்குத் தோதான முயற்சிகளை எடுத்தல் ;

(எ) கண்பார்வையற்றோரின் சமுதாயத்தினரால் எதிர் நோக்கப்படும் சட்டப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்ப தற்கு மத்தியஸ்தர் ஒருவராகச் செயல்படுதல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு ஒத்த குறிக் கோள்களையுடைய ஏனைய ஒருங்கமைப்புகளுடன் இசைந்து செயற்படுதல் ;

(ஐ) கண்பார்வையற்றோரின் சமுதாயத்தினருக்கு அவசிய மான நலன்புரி சேவைகளை வழங்குவதற்கு நிதி திரட்டுதல் ;

(ஒ) குருட்டுத்தன்மைக்குரிய ஏதுக்களை ஒழிப்பதற்கு சாத்தியப்படும் ஒவ்வொரு வழியிலும் செயற்படுதல் ;

(ஓ) கண்பார்வையற்றோரின் சமுதாயத்தினருக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டதும் சாதனம் அமைந் ததுமான “வயோதிபர் இல்லங்களை” தாபித்தலும், பேணுதலும் ;

(ஔ) கண்பார்வையற்றோரின் சமுதாயத்தினருக்கு புனர் வாழ்வு நிலையங்களையும், நலன்புரி நிலையங்களை யும் தாபித்தலும் பேணுதலும் ; அத்துடன்

(க) மேற்போந்த எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றின் எதனையும் ஊக்குவிப்பதற்கு அவசியமான அல்லது விரும்பத்தகுந்த வேறு எல்லா நடவடிக்கை களையும் மேற்கொள்ளுதல்.

*கூட்டுத் தாபனத்தின் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதே னும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமான அல்லது விரும்பத்தக்கவா றான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடாத்துதல், முடிவுறுத்தல், பிணைப்பொறுப்

புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணங்களைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், நன்கொடைகளையும், மானியங்களையும் பெறுதல், சேகரித்தல், அதன் நிதியங்களை முதலீடு செய்தல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த் துதல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்க ளும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கும், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய, பதவி தாங்குநர்களையும் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகவும், அதற்கிணங்கவும் தெரிவு தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான குழு உறுப்பினர்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்றோரும் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப் பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) காலத்துக்குக்காலம் உறுப்பினர்கள் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன் றிலிரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றைக் கொண்டு, இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை வகுப்பாக் கம் செய்தல் மற்றும் மீளப்பெறல் அத்துடன் வெளி யேற்றுதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களை, நிறைவேற்றுக்குழுவைத் தெரிவு செய்தல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர் களின் கடமைகளை நடாத்துதல் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும், நிறைவேற்றுக்குழுவினதும் கூட்டங்களில் அலுவல்கள் கொண்டுநடாத்தப்படுவ தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல் அத்துடன் முகாமை செய்தல், அதன் நிதியைக் கட்டுக் காவலில் வைத்திருத்தல் அத்துடன் அதன் கணக்கு களைப் பேணுதல், கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(உ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் அத்துடன் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவது போன்ற அதேமுறையில் அதே போன்ற கூட்டமொன்றில் திருத்தப்பட லாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவானவராதல் வேண்டும்.

சம்மேளனத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப் படற்பாலனவுமான கடன்கள்.

**7**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான சம்மேளனத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டுத் தீர்க்கப் படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், சம்மேளனத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகை களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**8**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்தி ருக்கவும் இயலுமானதாகவும் ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை ஈடு வைக்க, விற்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத் தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் இடப்படுதலாகாது. அத்துடன், அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதலாகாது. எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**10**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்